| தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செயல்முறைகள் | |
|---|---|
| பிறப்பிப்பவர் - திரு.வீ.செந்தமிழ்ச்செல்வன், | |
| ந.க.எண். 1361/2023/க.3 | நாள். 10-08-2022 |

பொருள் :: பணியமைப்பு ஊரக வளர்ச்சி அலகு தஞ்சாவூர் மாவட்டம் 2020-2021 ஆம் ஆண்டு - 20 சதவீத ஒதுக்கீடு அடிப்படையில் ஊராட்சி செயலரிலிருந்து பணிமாற்றத்தின் மூலம் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு - பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் - ஊர்நல அலுவலர் நிலை- II - திரு.த.ராஜா என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடல்.

படிக்கப் பட்டவை ::

1) ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை கடிதம் மே.கு.ந.க.எண். 16811/2022/பி.3, நாள். 08.12.2022.
2) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர் செ.மு.ந.க.எண். 10822/2020/க.5, நாள். 30-12-2022.
3) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), தஞ்சாவூர் கடிதம் ந.க.எண். 4501/2022/அ.1, நாள். 19-04-2023 மற்றும் 07.07.2023.

-----------

**உத்தரவு**

முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயலாணைகளில், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் திருவையாறு ஊராட்சி ஒன்றிய விளாங்குடி ஊராட்சியில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து வந்த திரு.த.ராஜா என்பவருக்கு 20 சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணிமாற்றல் மூலம் பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-II ஆக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது. தனியர், பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தில் 30-12-2022 பிற்பகல் ஊர்நல அலுவலர் நிலை-II ஆக பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

2) மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, இவரது பணியினை வரன்முறை செய்திட பரிந்துரைக்கப்பட்ட கருத்துரு பெறப்பட்டது.

3) இவரது கல்விச்சான்றுகளின்மீது மெய்த்தன்மை அறிக்கை பெறப்பட்ட பின்னரே பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை குறித்த இனங்கள் ஏதுமில்லை என அலுவலகத் தலைவரால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

4) எனவே, திரு.த.ராஜா என்பவருக்கு கீழ்க்காணும் அட்டவணையில் கலம் (4)-இல் குறிப்பிடப்பட்ட தேதியில் இவரது பணியினை இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-II பணிநிலையில் வரன்முறை செய்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

| வ.எண். | பெயர்/ பதவி/ பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1) | திரு.த.ராஜா,<br>ஊர்நல அலுவலர் நிலை-II,<br>ஊராட்சி ஒன்றியம், பாபநாசம். | 30-12-2022 பிற்பகல் | 30-12-2022 பிற்பகல் |

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர்.

10/08/2023.

பெறுநர்

திரு.த.ராஜா, ஊர்நல அலுவலர் நிலை- II,
ஊராட்சி ஒன்றியம், பாபநாசம். } - உரிய வழியாக.

நகல் - வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), பாபநாசம்.

நகல் - க.3 இருப்பு கோப்பிற்கு.